<u>வாடகை கட்டுப்பாட்டு அதிகாரி மற்றும்</u>

<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்</u>

ஆர்சிஓபி எண். 6/2014

இன்று 2023 ம் ஆண்டு ஜுலை திங்கள் 3 ம் நாள் இன்று இந்த ம.சா.3 ன் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.கே.ஆர்.கண்ணன்,B.A.,B.L., அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்படுகிறது.

பெயர் : கலைச்செல்வி

கணவர் பெயர் : ராஜா சின்னப்பன்

வயது : 62

<u>முதல் விசாரணை</u>

2 முதல் 5 மனுதாரர் ஆஜர் இல்லை. 1ம் மனுதாரர் ஆஜர். எதிர்மனுதாரர் ஆஜர் இல்லை. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். மனுவில் நான் 1ம் மனுதாரர்.

நான் தாக்கல் செய்துள்ள பிரமாண பத்திரிக்கையில் கூறியுள்ள விபரங்கள் அனைத்தும் எனக்கு தெரியும். அவை நான் கூறியவை தான். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். அதனை எனது முதல் விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ள கோருகிறேன். கீழ்க்கண்ட ஆவணங்கள் குறியீடு செய்யக் கேட்டுக் கொள்கிறேன்.

சாட்சியின் ஆதார் அட்டை ஒளிநகல் **ம.சா.ஆ.17** ஆகும். (அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது) (ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது. )

குறுக்கு விசாரணை வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க ஒத்தி வைக்கப்படுகிறது.

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

Sd/-K.R.Kannan

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி

திருப்பூர்.